**கவனிக்க.**- *2015.03.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1907 - 2015 මාර්තු මස 20 වැනි සිකුරාදා - 2015.03.20**

*1907 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 144 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 144 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | 145 |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 161 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2015, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மாச்சு மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2015 இன் இல. 70

டிஜவீஎப்/ஆர்ஈசீரீ/85/ஏவை/(1).

**இலங்கைத் தரைப்படை - தொண்டர்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் உள்ளடக்குதலும்

பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தர்/மகளிர் கெடற் உத்தியோகத்தர்கள் அவர்களினது பெயர்களின் முன்னே குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து நேரடியான இராணுவ சேவையில் ஈடுபடுத்தல் திட்டத்தின் அடிப்படையில் இலங்கை தரைப்படை தொண்டர் படையில் லெப்டினனட் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அன்றிலிருந்து இலங்கை இராணுவ பொது சேவைகள் படைக்கு உள்ளடக்குதலும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கெடெற் உத்தியோகத்தர் போரம்ப சமிந்த குமார லியனகே - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் ஹலாவத் முதியன்சேலாகே தானியா குணரத்ன - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் சன்கினி எரந்தி த சில்வா - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் தித்தெனி கமகே உதேனி தித்தெனிய - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் அலெத்துகே சத்துரானி துஷாரா அன்தோனி - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் கிரிஹெட்டிகே தோன ஸ்ரீமாலி பிரதீபிகா கிரிஹெட்டி - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் கேஷானி கயான்கி விஜேசூரிய- 07.03.2013
கெடெற் உத்தியோகத்தர் சஹன் ரிக்கிரி ஜயசிங்க - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் அத்துடாவே லியன ஆரச்சிகே ஷானிகா தில்ஹானி லியனஆரச்சி - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் ரன்தாரா சுஹஷினி கௌசல்யா குணதிலக - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் மாரசிங்ககே விமர்ஷனி நதீஷா கருணாரத்ன - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் ஜோசப்கே அஷானி தஸ்ரானி நவரத்ன - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் நிசன்சலா தலதாவத்த - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் பதுவத விதானகே ஜீவனி மதுஷா காரியவசம் - 07.03.2013
மகளிர் கெடெற் உத்தியோகத்தர் ஹெட்டிஆரச்சிகே செரணி இனோசிகா ஜயசேகர - 25.03.2013
கெடெற் உத்தியோகத்தர் நவகமுவே லொகுபத்திரனகே காஞ்சன லக்மால் ஜயதிலக - 25.06.2013
கெடெற் உத்தியோகத்தர் ஹேவகே ரவீந்திரனாத் தரங்க - 25.06.2013
கெடெற் உத்தியோகத்தர் ராமனாயககே சானக சத்துரங்க பெரேரா - 25.06.2013
கெடெற் உத்தியோகத்தர் ஹேவாவசம் பத்திராஜகே நிஷாந்த பத்திராஜ - 25.06.2013
கெடெற் உத்தியோகத்தர் பல்லே கொடுவெ அமில சந்தருவன் அமரசிங்க - 26.06.2013
கெடெற் உத்தியோகத்தர் தொம்பகஹகெதர அனுராத தேசப்பிரிய ரூபசிங்க - 25.07.2013

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்திஅமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2014, யூலை 24.

3-499

# அரசாங்க அறிவித்தல்கள்

**காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்)**
**கீழான அறிவித்தல்**

கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்படும் காணி மற்றும் மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் உறுதிகளுக்குரிய முதலாவது நிரலில் காணப்படும் தற்பொழுது சிதைவடைந்து அல்லது கிழிந்துபோயுள்ள காணியினை பதிவு செய்த புத்தகம்/ஏடு மீண்டும் பூரணமாக தற்காலிகமாக தயாரிக்கப்பட்டுள்ளதனால் காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடிதாள்) கட்டளைச் சட்டத்தின் (120 ஆம் அத்தியாயம்) 4 ஆவது பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கின்றேன்.

2. 2015.03.20 ஆந் திகதி தொடக்கம் 2015.04.03 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் எந்தவொரு நபருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட தற்காலிக ஏட்டினை ஹோமாகம காணிப் பதிவகத்தில் பரிசீலனை செய்து பார்க்க முடியும்.

3. அத்தற்காலிக ஏட்டில் எதுவிதமான அல்லது அதன் குறிப்பில் அடங்கியுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாக எந்தவிதமான ஆட்சேபனையினை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் நபர் அல்லது ஏதாவது குறிப்பு அல்லது ஏதாவது குறிப்பினால் விடப்பட்டிருக்கும் விடயத்தினை சேர்ப்பதற்கு வேண்டுகோளினை சமர்ப்பிக்கும் நபர் அந்த ஆட்சேபனையினை அல்லது வேண்டுகோள் அடங்கிய கடிதத்தினை விபரத்துடன் தெளிவாக அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடனும் 2015.04.10 ஆந் திகதிக்கு முன்பதாக இங்கு கீழ் கையொப்பம் இட்டவருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்:-

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
| --- | --- | --- |
| *பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள்* | *காணியின் விபரம்* | *பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள்* |
| கொழும்பு மாவட்டத் தின் ஹோமாகம காணிப் பதிவகத்தில் G என்னும் பிரிவில் 169 ஆவது புத்தகத் தில் 112 வது ஏடு. | மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் பல்லே பற்று ஹேவாகம் கோறளையில் தலவத்துகொட இல் அமைந்துள்ள "கொரககஹாவத்த" என்னும் இடத்திற்கு எம். பீ. த சில்வா அனுமதிபெற்ற நிலஅளவையார் மூலம் 1930.06.04 ஆந் திகதி அளவிடப்பட்ட இலக்கம் 2115 ஆம் அளவிடையின் பிரகாரம் எல்லைகள் :-<br><br>வடக்கு : பஸ்தியன் அவர்களுக்கு பிரித்தொதுக்கப்பட்ட அக் காணியின் சீ என்னும் எழுத்திலான பகுதி;<br>கிழக்கு : சாமல் பெரேரா மற்றும் ஏப்ரகம் பீரிஸ்க்கு சொந்தமான காணி ;<br>தெற்கு : கேப்ரியல் பெரேரா மற்றும் ஏனையோருக்கு உரித்தான காணி ;<br>மேற்கு : பாதைக்காக ஒதுக்கப்பட்ட நிலம்.<br><br>விஸ்தீரணம் : 1ஏ. 1றூ. 11பே. | 1. எச். டபிள்யூ. குணசேகர பி. நொ. மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1958.11.07 ஆந் திகதிய 7386 ஆம் இலக்க முடைய அறுதி உறுதி.<br><br>2. எல். பண்டிதரத்ன பி. நொ. மூலம் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1974.12.22 ஆந் திகதிய 3164 ஆம் இலக்கமுடைய நன்கொடை உறுதி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : ஆர்ஜீ/என்பி/11/2/13/2015/ஏடு. தயாரித்தல்.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

3-572

# வரவு செலவுத் திரட்டுக்கள்

## கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்

கொழும்புப் பல்கலைக்கழகம்

**2012, திசெம்பர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறான இணைந்த ஐந்தொகை**

***சொத்துக்கள***

| | குறிப்பு | 2012 | 2011 |
| --- | --- | --- | --- |
| **நடைமுறையில்லாச் சொத்துக்கள்** | | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி, உபகரணம் | | | |
| கட்டடம் | | 12,643,800 | 13,609,495 |
| ஆய்வு கூடம், கற்பித்தல் உபகரணம், தளபாடம் மற்றும் பொருத்துகள் | | 60,601,400 | 63,508,994 |
| நூலகப் புத்தகங்களும், சஞ்சிகைகளும் | | 990,690 | 882,382 |
| மோட்டார் வாகனங்கள் | | 3,774,644 | 5,015,623 |
| மொத்தம் | | 78,010,534 | 83,016,494 |
| மூலதன சொத்துக்களின் மேம்படுத்தல் | | 30,413,602 | 31,309,842 |

| | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|
| **நடைமுறையில்லாச் சொத்துக்கள்** | | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி, உபகரணம் | | | |
| நிர்மாணிப்பு - முடிவுறாத வேலை | | 37,748,579 | 15,420,756 |
| நமுைறைச் சொத்துக்கள் | | | |
| பொருட்கள் இருப்பு | | 2,442,445 | 2,588,631 |
| பெறவேண்டியவை, முற்கொடுப்பனவு | | 38,602,043 | 33,202,229 |
| SIDA நிதி | | - | 60,429,110 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | | 581,177,143 | 482,533,173 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 622,221,631 | 578,753,143 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 768,394,353 | 708,500,240 |
| **சொத்துக்கள்/பங்குரிமை** | | | |
| மூலதனமும் ஒதுக்கமும் | | | |
| மூலதனம் | | | |
| செலவிடப்படாத மூலதன மானியம் | | 4,857,245 | 3,361,251 |
| மூலதன மானியம் - செலவிடப்பட்டது | | 57,564,972 | 39,984,898 |
| வெ. நா. நிதி கருத்திட்ட - செலவிடப்படாதது | | 1,336,470 | 7,823,342 |
| வெ. நா. நிதி கருத்திட்ட - செலவிடப்பட்டது | | 30,803,032 | 11,684,294 |
| வேறுபட்ட மானியம் | | - | 37,430,874 |
| கொழும்பு பல்கலைக்கழக பங்களிப்பு | | 8,155,714 | 8,155,714 |
| மொத்தம் | | 102,717,433 | 108,440,373 |
| **ஒதுக்கங்கள்** | | 433,117,827 | 342,298,905 |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதி | | 67,859,485 | 54,954,738 |
| நடைமுறையில்லா பொறுப்புக்கள் | | | |
| ஓய்வூதியப் பயன்கள் | | 27,573,818 | 23,393,238 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| ஏனைய சென்மதிகள், கொடுப்பனவுகள் | | 137,051,170 | 117,960,098 |
| SIDA நிதி | | - | 60,429,110 |
| வங்கி மேலதிகப் பற்று | | 74,620 | 1,023,778 |
| மொத்தம் | | 137, 125,790 | 179,412,986 |
| **மொத்த சொத்துக்கள்/பங்குரிமை** | | 768,394,353 | 708,500,240 |

2013, பெப்புருவரி 28.

பணிப்பாளர் (கொ.ப. கணி. கற். நிறு.)

சிரேஷ்ட உதவி நிதியாளர்.

**கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்**

கொழும்புப் பல்கலைக்கழகம்

**2012, திசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான இணைந்த வரவு செலவுக் கணக்கு**

| | 2012 | 2011 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| பட்டமானி நிகழ்ச்சித்திட்டம் - வருமானம் | - | - |
| அரச மானியம் | 91,802,000 | 83,102,728 |
| நிறுத்தப்பட்ட வருமானம் - மானியங்கள் | 14,629,135 | 19,778,039 |
| ஏனையவை | 2,671,894 | 4,879,143 |
| | 109,103,029 | 107,759,910 |

| | 2012 ரூபா | 2011 ரூபா |
|---|---|---|
| **பட்டமானி நிகழ்ச்சித்திட்டம் - செலவு** | - | - |
| பணியாளர் கொடுப்பனவுகள் | 60,733,791 | 50,717,167 |
| போக்குவரத்துச் செலவுகள் | 37,701 | 387,447 |
| வழங்கல்கள் | 2,927,786 | 2,424,562 |
| ஒப்பந்தச் சேவைகள் | 26,818,704 | 24,159,062 |
| ஓய்வூதியப் பயன்கள் | 13,726,350 | 8,133,475 |
| சந்தாக்கள், பங்களிப்புக்கள், அங்கத்துவ கட்டணம் | 36,929 | 44,139 |
| பணியாளர் அபிவிருத்தி | 106,270 | 349,643 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 6,825,057 | 6,094,293 |
| தேய்மானம் | 14,629,135 | 18,551,317 |
| மொத்தம் | 125,841,723 | 110,861,105 |
| பட்டமானி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பற்றாக்குறை | (16,738,694) | (3,101,195) |
| விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம் | | |
| விஞ்ஞான முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் | 41,891,163 | 30,760,124 |
| வெளிவாரி பட்டங்கள் நிலையம் | 40,714,205 | 43,468,371 |
| கணினி சேவைகள் நிலையம் | 2,137,334 | 654,128 |
| உயர்தர டிஜிடல் ஊடக தொழில்நுட்பநிலையம் | 827,464 | 175,248 |
| e கற்றல் நிலையம் | 18,105,244 | 1,972,517 |
| தொழில் அபிவிருத்தி நிலையம் | (520,064) | (461,413) |
| விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்ட மேலதிக வருமானம் | 103,155,346 | 76,568,975 |
| கருத்திட்டங்கள் | | |
| வெளிநாட்டு நிதியிடப்பட்ட பொது கருத்திட்டம் | 10,792,226 | - |
| ICT மாநாடு - 2012 | 147,339 | - |
| IDRC Vertual கிராமம் | 95,992 | 65,944 |
| கருத்திட்டங்களிலிருந்து மேலதிக வருமானம் | 11,035,557 | 65,944 |
| தேறிய மேலதிக வருமானம்/(பற்றாக்குறை) | 97,452,209 | 73,533,724 |

## கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்

கொழும்புப் பல்கலைக்கழகம்

### 2012 திசெம்பர், 31 ஆந் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான இணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2012 | 2011 |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல் | | |
| வருடத்திற்கான மிகை/(பற்றாக்குறை) | 97,452,209 | 73,533,724 |
| **சீராக்கல்கள்** | | |
| தேய்மானம் | 25,210,600 | 25,380,877 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 4,407,740 | 3,233,192 |
| தேய்மானத்திற்கான மேலதிக ஏற்பாடு | 0 | (67,655) |
| நிறுத்தப்பட்ட வருமானம் | (22,142,464) | (23,974,726) |
| முன்னர் பெறப்பட்ட மானியத்திலிருந்து மாற்றல் | (10,901,365) | (5,245,357) |
| ஆதனம், பொறி, உபகரணம் விற்பனை இலாபம் | (96,450) | (1,283,000) |
| நாணயமாற்றில் கிடைப்பனவு | (11,616,474) | (784,747) |
| தொழிற்படு மூலதன மாற்றல் மிகை/குறைவு | 82,313,796 | 70,792,308 |
| தொழிற்படு மூலதன மாற்றல் | 9,792,438 | 8,070,977 |
| தொழிற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் | 92,160,234 | 78,863,285 |
| முதலீட்டு நடவடிக்கை மூலம் காசுப்பாய்ச்சல் | | |
| ஆதனம், பொறி, உபகரணம் கொள்வனவு | (16,146,779) | (28,430,366) |
| நிர்மாணித்தலுக்கான கொடுப்பனவு | (22,327,823) | - |
| ஆதனம், பொறி, உபகரணம் விற்பனை மூலம் பெற்றது | 96,450 | 1,283,000 |
| ஆதனம், பொறி, உபகரணம் புனரமைப்பும் மேம்படுத்தலும் | (1,905,331) | (561,288) |
| | 51,822,751 | 51,154,631 |

| | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|
| நிதியிடல் நடவடிக்கை மூலம் தேசிய காசுப்பாய்ச்சல் | | |
| பெற்றுக்கொண்ட மூலதன மானியம் | 19,150,000 | 18,205,340 |
| பெற்றுக் கொண்ட கருத்திட்ட மானியம் | 5,639,052 | 6,202,608 |
| பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்ட மீதிகளின் மாற்றல் | (2,503,889) | (5,805,939) |
| NeLC திட்ட மாற்றம் | - | (379,400) |
| ICT மாநாடு | 1,191,152 | - |
| பணிக்கொடை செலுத்தியது | (227,160) | (73,688) |
| வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து பெற்றவை | 12,904,748 | 12,093,420 |
| காசுசும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/குறைவு | 87,976,654 | 81,396,972 |
| நாணய மாற்றில் கிடைப்பனவு /(நட்டம்) | 11,616,474 | 784,747 |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவை | 481,509,396 | 399,327,677 |
| வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் | 581,102,523 | 481,509,396 |

## கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்

நிதியியல் முக்கிய அம்சங்கள்

| நிதியாண்டு | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|
| ஐந்தொகை | | | | | | | |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | | 481,510 | 401,220 | 327,808 | 260,935 | 201,245 | 164,656 |
| பெறவேண்டியவைகளும் முற்கொடுப்பனவுகளும் | 38,602 | 33,202 | 35,580 | 34,859 | 32,253 | 19,219 | 13,058 |
| பொருட்கள் இருப்பு | 2,442 | 2,588 | 3,251 | 2,404 | 2,126 | 1,548 | 1,859 |
| UCSC முகாமை செய்யும் SIDA நிதி | - | 60,429 | 222,763 | 186,424 | 77,020 | 81,555 | 86,432 |
| UCSC முகாமை செய்யும் LEARN நிதி | - | - | 51,256 | 74,896 | 49,024 | 61,861 | 27,695 |
| மூலதன சொத்துக்களின் மேம்படுத்தல் | 30,413 | 31,309 | 34,381 | 21,694 | 20,455 | 18,918 | 16,231 |
| நிர்மாணிப்பு - முடிவுறாத வேலை | 37,749 | 15,420 | - | - | - | - | - |
| ஆதனம், பொறி, உபகரணம் | 78,011 | 83,016 | 81,261 | 75,535 | 83,684 | 88,079 | 115,581 |
| மொத்தச் சொத்துக்கள் | 187,217 | 707,474 | 829,712 | 723,620 | 525,497 | 472,425 | 425,512 |
| மூலதனம் | 102,717 | 108,440 | 105,296 | 108,690 | 109,000 | 102,707 | 124,218 |
| ஒதுக்கீடுகள் | 433,118 | 342,299 | 272,126 | 232,899 | 179,578 | 138,765 | 109,647 |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் | 67,859 | 54,954 | 43,215 | 30,110 | 32,528 | 19,597 | 18,457 |
| ஏனைய பொறுப்புக்கள் | 164,700 | 201,781 | 409,075 | 351,921 | 214,381 | 211,356 | 173,190 |
| மொத்தப் பொறுப்புக்களும் நிதிகளும் | 768,394 | 707,474 | 829,712 | 723,620 | 525,497 | 472,425 | 425,512 |
| அரச மானியம் - மீண்டெழும் | 91,802 | 83,102 | 65,381 | 68,610 | 71,555 | 78,695 | 52,850 |
| அரச மானியம் - மூலதனம் | 19,150 | 16,000 | 4,920 | 4,167 | 11,055 | 10,560 | 36,740 |
| பெறப்பட்ட மொத்த அரச மானியம் | 110,952 | 99,102 | 70,301 | 72,777 | 82,610 | 89,255 | 89,500 |
| மீண்டெழும் செலவு - பட்டதாரி நிகழ்ச்சி | 111,212 | 92,310 | 80,120 | 84,461 | 80,083 | 76,564 | 65,617 |
| மூலதனச் செலவு | 31178 | 26,628 | 21,301 | 8,542 | 12,764 | 12,305 | 29,064 |
| மொத்தச் செலவு பட்டதாரி நிகழ்ச்சி | 142,390 | 120,938 | 101,421 | 93,003 | 92,847 | 88,869 | 94,681 |
| கிடைக்கப்பெற்ற வருமானத்தின் பங்களிப்பு | 31,438 | 2,836 | 31,120 | 20,226 | 10,237 | - | 5,091 |
| கிடைக்கப்பெற்ற மொத்த தேறிய வருமானம் - % | 16% | 14% | 25% | 17% | 10% | 0% | 9% |
| கிடைக்கப்பெற்ற தேறிய வருமானத்தின் பங்களிப்பு -% | 28% | 28% | 62% | 35% | 18% | 0% | 21% |
| கிடைக்கப்பெற்ற வருமானம் | 194,230 | 159,429 | 123,267 | 115,690 | 105,426 | 68,494 | 58,981 |

| நிதியாண்டு | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவு - விரிவாக்க திட்டம் | 82,390 | 80,197 | 73,313 | 58,399 | 47,316 | 40,117 | 35,141 |
| வெளிநாட்டு நிதி திட்டங்களுக்காக பெறப்பட்ட மானியம் | 5,639 | 6,202 | 93,581 | 104,834 | 70,969 | 35,700 | 46,356 |
| உள்வாரி மாணவர் எண்ணிக்கை | 737 | 737 | 739 | 748 | 754 | 584 | 592 |
| பணியாளர்களின் எண்ணிக்கை | 144 | 144 | 151 | 162 | 156 | 147 | 139 |
| மாணவரொருவருக்கான கிரயம் வருடத்திற்கு ('000) | 151 | 125 | 108 | 113 | 106 | 131 | 111 |
| பணியாளரொருவருக்கான கிரயம் வருடத்திற்கு ('000) | 670 | 578 | 457 | 414 | 384 | 372 | 359 |

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

2013, ஒற்றோபர் 31.

பணிப்பாளர்,
கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம்

**கொழும்பு பல்கலைக்கழகக் கணினிக் கல்விக் கற்கைகள் நிறுவகத்தின் 2012, திசெம்பர் மாதம் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2002 ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவக சட்ட விதிகளின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் 2012, திசெம்பர் மாதம் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதி செயலாற்றல் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2012, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவக கட்டளைச் சட்ட விதிகளின் 23 ஆம் பிரிவு மற்றும் 108(1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2013 , யூலை 23 ஆந் திகதி நிறுவகப் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகள் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்

தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காயள்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 *முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை*

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 *முனைப்பழியுள்ள அபிப்பிராயம்*

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் 2012, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் நிலைமையையும் காசுப் பாய்ச்சலினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 *நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்*

#### 2.2.1 ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

கணினிக் கற்கைகள் நிறுவகம் ''தீக்சன'' என்ற பெயரில் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை தாபித்திருந்ததுடன் அதன் முகாமைத்துவ சபையின் 80 சதவீதமானோர் கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையாகக் காணப்பட்டதுடன் அந்த உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இக்கம்பனி தொடர்பில் எவ்வித வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன :-

(அ) முழுமையாக பெறுமானத் தேய்வு செய்து முடிக்கப்பட்டு புத்தகப் பெறுமதி பூச்சியமாகவுள்ளதும் பயன்பாட்டிலுள்ளதுமான 2,775,000 ரூபா கிரயமான வான் வாகனம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை;

(ஆ) நிறுவகத்தினால் ஏனைய நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்த ஒன்பது செயற்திட்டங்களில் மிகையாகக் காணப்பட்ட ரூபா 41,336,035 இனை வருமானத்திற்கு எடுப்பதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்பாக பல வருடங்களாக முன் கொண்டு வரப்பட்டிருந்தது;

(இ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் படி அட்டுறு முறையில் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், விடுதி வாடகை வருமானத்தினை காசு அடிப்படையில் கணக்கீடு செய்திருந்தமை காரணமாக விடுதி வாடகை வருமானம் ரூபா 35,933 ஆல் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன;

(ஈ) நிறுவகத்தினால் 2006, மாச்சு 31 ஆந் திகதிய 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 37(2) (ஆ) பிரிவின் படி, நிலையான வைப்புக்கள் வட்டியிலிருந்து அந்தந்த ஆண்டுகளில் குறைக்கப்பட்ட மொத்தம் ரூபா 3,568,155 கூட்டுத் தொகையினை நிறுத்தி வைத்தல் வரிச் செலவினமாக கணக்கீடு செய்யாது நடைமுறைச் சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மொத்தம் ரூபா 471,048 தொகையான பெறவேண்டிய மீதிகள் மற்றும் மொத்தம் ரூபா 4,800,790 தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் 1 முதல் 8 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட வீச்சில் தீர்க்கப்படாதிருந்தன.

*2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை*

*பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன:-*

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) இலங்கை அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 394 (அ) | 2010 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் பொறுப்பாக காட்டப் பட்டிருந்த ரூபா 75,878 பெறுமதியான இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 756 மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தாபன விதிக்கோவையின் xxvi ஆம் அத்தியாயத் தின் 2 ஆம் உப பிரிவு | நிறுவகத்தில் காணப்படுகின்ற அனைத்து நடைமுறையல்லா சொத் துக்களும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதி லும், ரூபா 465,902,538 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக் களை உப பிரிவுகளை மெய்மையாய்வு செய்து மெய்மையாய்வுச் சபை அறிக்கை 2013, ஓகத்து 23 ஆந் திகதி வரை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2011, ஏப்பிறல் 04 ஆந் திகதிய 45 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4(அ) ஆம் ஆலோசனை மற்றும் உயர் கல்வி அமைச்சின் 2011, சனவரி 20 ஆந் திகதிய 2011/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆய்வுப் படிகளிற்கு உரித்தினைப் பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக் கழகத்தின் ஆய்வுப் பரிந்துரைச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிப் முகாமைத்துவத்திற்கான குழுவால் பிரேரணைகளிற் காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற் குப்பதிலாக முகாமைத்துவக் கலைச் சபையின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. கல்விசார் பதவியணியினர் 25 பேருக்கு மீளாய்வாண்டின் சனவரி முதல் ஒற்றோபர் வரையான காலத்தில் ரூபா 2,060,529 படிகள் செலுத்தப் பட்டிருந்தன. |
| (இ) 2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கணினிக் கற்கைகள் நிறுவக சட்ட விதிகளின் 13 ஆம் பிரிவின் 2(1)(ஆ) | ஆய்வுப் படிகளை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்கு ஆராய்ச்சி செயன்முன்னேற்றக் குழு திருப்தியடைதல் வேண்டுமாயினும், 07 விரி வுரையாளர்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 557,175 ஆய்வுப் படிகளிற்காக ஆராய்ச்சி செயன்முன்னேற்றக்குழு திருப்தியடைந் திருக்கவில்லை. |
| (ஈ) 2009, யூன் 03 ஆந் திகதிய யூஜிசீ/ஜேயூஏ/2/பீஜீஎஸ்/6 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் சுற்று நிருபம் | பல்கலைக்கழக பட்டப்பின்படிப்பு பாடநெறிக்காக விரிவுரைகளை நடாத்தும் விரிவுரையாளர்களிற்காக மணித்தியாலத்திற்கு ரூபா 2,500 வீதம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2012, சனவரி மாதம் முதல் செத்தெம்பர் மாதம் வரை விரிவுரை மணித்தியாலத்திற்கு ரூபா 3,000 வீதம், ரூபா 4,000 வீதமும் ரூபா 2,840,250 கூட்டுத் தொகையான பணம் செலுத்தப்பட்டிருந்தது. |

***3. நிதி மீளாய்வு***

***3.1 நிதி விளைவுகள்***

*சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின்படி 2012, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 56,50,218 மிகையொன்றானதுடன் அதற்கு முன்னைய ஆண்டுக்கான நேரெதிரான பற்றாக்குறை ரூபா 9,569,010 ஆகும். மீண்டெழும் செலவினங்களிற்கான ரூபா 91,802,000 அரசாங்க மானியம் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 97,452,218 வரை முன்னேற்றமடைந்திருந்தது. முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்கான ரூபா 83,102,728 அரசாங்க மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 73,533,724 மிகையாகியிருந்தது. குறிப்பாக மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியம் ரூபா 8,699,272 ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் வருமானம்ரூபா 31,579,250 ஆல் அதிகரித்திருந்தமையே மீளாய்வாண்டில் ரூபா 23,918,500 முன்னேற்றம் ஏற்படுவதற்கு காரணமாகியிருந்தது.*

4. **செயற்பாட்டு மீளாய்வு**

4.1 **முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன :-

(அ) நன்னடத்தை விரிவுரையாளர் ஒருவர் 2005, திசெம்பர் 31 ஆந் திகதி பதவி நீங்கிச் சென்றிருந்ததுடன் ரூபா 798,589 பிணைமுறி நிறுவகத்திற்கு இழப்பாகியிருந்தது. 2006, நவெம்பர் 16 ஆந் திகதி முதல் 03 சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபரிடமிருந்து விளக்கம் கோரப்பட்டிருந்த போதிலும் அவ்விளக்கமளிப்பு கிடைக்காமையால் சட்டரீதியான நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன. இத்தொகையினை ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை ;

(ஆ) விரிவுரையாளர் ஒருவர் 2004, ஒற்றோபர் 01 ஆந் திகதி பதவி நீங்கிச் சென்றிருந்ததுடன் அறவிடப்பட வேண்டியிருந்த பிணை முறிப் பெறுமதி ரூபா 1,311,691 ஆகும். 2006, ஒற்றோபர் 10 ஆந் திகதி இப்பிணை முறியினை செலுத்துமாறு விரிவுரையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பரிசோதனைத் திகதி வரைக்கும் அப்பிணை முறி செலுத்தப்படாதிருந்ததுடன் விரிவுரையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கு நிறுவனம் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை;

(இ) விரிவுரையாளர் ஒருவர் 2004, நவெம்பர் 01 ஆந் திகதி பதவி நீங்கிச் சென்றிருந்ததுடன் அறவிடப்பட வேண்டியிருந்த பிணை முறிப் பெறுமதி ரூபா 3,440,576 ஆகும். விரிவுரையாளரின் தற்போதைய முகவரியினை கண்டுபிடிக்க முடியாமையால் சட்ட ரீதியான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு 2005, ஓகத்து 31 ஆந் திகதி சட்டமா அதிபரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் 8 வருடங்கள் கடந்த பின்னரும் நிறுவகத்தினால் சட்டமா அதிபரிடம் விசாரித்தறிந்திருக்கவில்லை;

(ஈ) விரிவுரையாளர் ஒருவர் 2004, சனவரி 01 ஆந் திகதி பதவி நீங்கிச் சென்றிருந்ததுடன் அறவிடப்பட வேண்டியிருந்த பிணை முறிப் பெறுமதி ரூபா 3,373,722 ஆகும். பிணை முறி மீறப்பட்டு 2 1/2 ஆண்டுகள் கடந்த பின்னர் அதாவது 2006, மே 22 ஆந் திகதி நிறுவகத்திற்கு அறவிடப்பட வேண்டிய பிணை முறியினை செலுத்துமாறு விரிவுரையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பிணை முறி அறவிடப்பட்டிருக்கவில்லை. கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு இணக்கப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு விரிவுரையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையில் ரூபா 2,000,000 இனை 2013, செத்தெம்பர் 22 ஆந் திகதியன்றும் ரூபா 1,370,772 இனை 2014, மாச்சு 22 ஆந் திகதியன்றும் செலுத்துவதற்கு இணங்கப்பட்டதாக நிறுவகத்தின் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

4.2 **நிதியங்களின் குறைப் பயன்பாடு**

நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தினால் ஜப்பான் ஒத்துழைப்பு நிதியத்திலிருந்து ஊடக தொழில்நுட்ப நிலையம் (Advance Digital Media Technology Centre) மற்றும் சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி செயற்திட்டம் (International Development Research Project) என்பவற்றிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 4,197,538 நிதிகள் மூன்று ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தன.

5. **கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

5.1 **கூட்டிணைந்த திட்டம்**

பொது முயற்சிகள் நல்லாளுகை தொடர்பான வழிகாட்டல்களின் 5 ஆவது அத்தியாயத்தின் 5.1.2 ஆம் ஆலோசனையின் பிரகாரம், 2011-2015 ஆம் காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தில் நிறுவக சொத்துக்களின் தற்போதைய நிலைமை தொடர்பான கூற்று, நிறுவகத்தில் காணப்படும் பலம், இலட்சியங்கள் மற்றும் அவை தொடர்பில் காணப்படுகின்ற பலவீனங்கள் மற்றும் தடைகளை பகுப்பாய்வு ரீதியாக இனங்கண்டு கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட கூற்று (SWOT Analysis) மற்றும் அண்மைய மூன்று ஆண்டுகளிற்கான செயற்பாட்டு விளைவுகள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

5.2 **செயல்நடவடிக்கைத் திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன :-

(அ) நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அந்தந்த செயல்களுக்கான கால எல்லை, எதிர்பார்த்த இலக்குகள் மற்றும் பொறுப்புடைய உத்தியோகத்தர்களை வெவ்வேறாக இனங்காணக்கூடிய விதத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவுத் திட்டடத்தில் உள்ளடங்கியிருந்த ரூபா 5,500,000 கொள்வனவு நடவடிக்கைகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

5.3 **வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

நிறுவகத்தின் 2011, வருடாந்த ஆண்டறிக்கை 2013, யூலை 23 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ் அறிக்கை 2013, பெப்புருவரி 14 ஆந் திகதி உயர் கல்வி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டதாக நிறுவகத்தின் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

*5.4 **கணினிக் கற்கைகள் நிறுவகத்தினுள் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை ஸ்தாபித்தல்***

*கணினிக் கற்கைகள் நிறுவகம் தாபிக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவக சட்ட விதிகளின் 18(iv) ஆம் பிரிவின் படி கணினி நிலையமொன்றைத் தாபிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச் சட்டத்தின் 24 ஆம் பிரிவுடன் இணங்காத வகையில் கணினிக் கற்கைகள் நிறுவக சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒத்த நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கணினிச் சேவைகள் நிலையத்திற்கு நேரடிப் போட்டித் தன்மைக் கொண்ட கம்பனியொன்றைத் தாபித்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி அமைச்சு மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் முகாமைத்துவச் சபையின் தீர்மானத்தின் படி கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்டதாக "தீக்சன" என்ற பெயரில் கம்பனியொன்றை தாபித்திருந்தமை சட்டத்திற்கு முரணானதாகும் என்பது அவதானிக்கப்பட்டது.*

*6. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்***

*கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.*

*(அ) நிலையான சொத்துக்கள்*
*(ஆ) கணக்கு வைத்தல்*
*(இ) செயற்திட்ட நிதிகள்*
*(ஈ) கொள்வனவுகள்*

*டபிள்யூ. பீ. சீ. விக்கிரமரத்ன,*
*பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி.*

*2013, திசெம்பர் 31.*

*கணக்காய்வாளர் தலைமையதிபதி*
*கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்,*
*இலக்கம் 306/72, பொல்தூவ வீதி,*
*பத்தரமுல்லை.*

*கொழும்பு பல்கலைக்கழகக் கணினிக் கல்விக் கற்கைகள் நிறுவகத்தின் 2012, திசெம்பர் மாதம் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2002 ஆண்டின் கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவக சட்ட விதிகளின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) ஆம் பிரிவு ஆகியவற்றின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்*

*1.2 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு***

*இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.*

*1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு***

*எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை பொதுத்துறை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.*

*நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது*

*அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.*

*எனது முனைப்பழியுள்ள கணக்காயள்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.*

### *1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை*

*இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.*

## *2. நிதிக்கூற்றுக்கள்*

### *2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்*

*இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் 2012, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை அரசத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.*

***பதில் :*** *குறித்துக் கொண்டேன்.*

### *2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்*

*2.2.1 கூட்டுக் கணக்குகள் தயாரித்தல்*

*கணினிக் கற்கைகள் நிறுவகமானது ''தீக்ஷன'' என்ற பெயரில் உத்தரவாதத்துடன் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று உருவாக்கப்பட்டிருந்ததுடன், அதன் முகாமைத்துவ சபை நூற்றுக்கு 80 அளவில் கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் முகாமைத்துவ சபை என்பதுடன், அவ் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்று சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், இந்த தீக்ஷன கம்பனி சம்பந்தமாக எதுவிதமான வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.*

***பதில் :*** *2013 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது தீக்ஷன கம்பனியின் கணக்குகளையும் உள்ளடக்கி கூட்டுச் சேர்ந்த கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.*

*2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்:*

*பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன :-*

*(அ) முழுமையாக பெறுமானத் தேய்வு புத்தக மீதி பூச்சியமாக்கப்பட்டிருந்தும், ரூபா 2,775,000 கிரயமான பாவனையிலுள்ள வேன் வாகனம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.*

***பதில் :*** *WP GF 5434 ஆம் இலக்கமுடைய ரூபா 2,775,000 கிரயமான வேன் வாகனத்தின் புத்தகப் பெறுமதி பூச்சியமென்பதால் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மீள்மதிப்பீடு செய்யப்பட்டு, 2013 ஆம் ஆண்டின் கணக்குகளில் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியினை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.*

*(ஆ) நிறுவகத்தினால் ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒன்பது கருத்திட்டங்களின் மேலதிக தொகையான ரூபா. 41,336,035 வருமானமாக கொள்ளுவதற்குப் பதிலாக நடைமுறைப் பொறுப்பாக சில வருடங்களாக முன் கொண்டுவரப்பட்டுள்ளது.*

***பதில் :*** *நடைமுறைப் பொறுப்பாக காட்டப்பட்டுள்ள கருத்திட்ட நிதி மற்றும் அது தொடர்பான பதில் கீழே தரப்பட்டுள்ளது.*

| கருத்திட்டம் | 2012.12.31 ஆந் திகதியில் மீதி | கருத்திட்டத்தின் தற்போதைய நிலை | மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் |
|---|---|---|---|
| 1. SIDA Phd, Networking projects | 32,133,791 | கருத்திட்டத்தின் இறுதி அறிக்கை வழங்கப் பட்டுள்ளதுடன் SIDA நிறுவனத்தின் கணக்காய்வாளர்கள் இறுதிக் கணக்காய்வை நிறைவு செய்து இறுதி அறிக்கை 2013.10.11 ஆந் திகதியில் வெளியிட்டுள்ளனர். | இறுதிக் கணக்காய்வு அறிக்கைக் கான சிபாரிசுகள் SIDA நிறுவனத் திலிருந்து கிடைத்ததன் பின் மிகுதியான தொகை பற்றி கருத்திட்ட ஒருங்கிணைப் பாளர்களது சிபாரிசின் படி முகாமைச் சபையின் அங்கீகாரத்துடன் தேவை யான நடவடிக்கை எடுக்கிறேன். |
| 2. Asia @ Bit | 1,298,615 | | |
| 3. Pandora | 906,725 | | சம்பந்தப்பட்ட கருத்திட்ட ஒருங்கிணைப் பாளர்களது சிபாரிசின் படி முகாமைச் சபையின் அங்கீகாரத்துடன் குறிப் பிட்ட மிகுதித் தொகை 2013 ஆம் ஆண்டின் வருமானமாக எடுப்ப தற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| 4. VET | 226,649 | கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட் டுள்ளதுடன் மிகுதியான தொகை இவ்வாறு காட்டப்பட்டுள்ளது. | |
| 5. GIS Project | 1,518,739 | | |
| 6. In Country training Programme | 2,625,758 | | |
| 7. JICA | 2,625,758 | இது மேலே குறிப்பிடப்பட்டுள்ள இல. 6 in Country Training Programme. மீண்டும் உள்ளக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட சீராக்கல் செய்து கணக் காய்வு அறிக்கை மீளவும் சமர்ப்பிப்ப தற்கு கணக்காய்வாளர்கள் இணங்கி யுள்ளனர். |
| | 41,336,035 | | |

(இ) சமர்ப்பிக்கப்பட்டுள்ளநிதிக் கூற்றுக்கள் குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க அட்டுறு கொள்கையடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், விடுதியின் வாடகை வருமானம் நிதி அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளதன் காரணமாக விடுதி வாடகை வருமானம் ரூ. 35,933 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

பதில்: மாணவர்களுக்கான கல்வியாண்டு 2011, ஒற்றோபர் மாதம் தொடங்கியதுடன் ஆரம்பத்தில் அவர்களிடமிருந்து கிடைத்த வருமானம் 2011 ஆம் ஆண்டின் வருமானமாக எடுக்கப்பட்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டு இறுதியில் பல்கலைக்கழகத்தில் நிலவிய குழப்ப சூழ்நிலை காரணமாக அடுத்த கல்வியாண்டின் ஆரம்பம் 2012 ஆம் ஆண்டினுள் நிகழ்ந்ததால் 2012 ஆம் ஆண்டு விடுதிக் கட்டண வருமானம் குறைவடைந்து உள்ளது.

(ஈ) நிறுவனத்தினால் 2006, மாச்சு 31 ஆந் திகதியுடைய 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டரசிறை சட்டத்தின் 37(2) ஆம் பிரிவிற்கேற்ப, நிலையான வைப்பு வட்டியிலிருந்து அந்தந்த வருடங்களில் மீளளிப்புச் செய்யப்பட்ட மொத்தம் ரூ. 3,568,155 ஆன நிறுத்தி வைத்தல் வரித் தொகை செலவாக கணக்கு வைக்கப்படுவதை விடுத்து நடைமுறைச் சொத்தாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

***பதில் :*** குறிப்பிட்ட நிறுத்தி வைக்கப்பட்ட வரித் தொகை செலவாக 2013 ஆம் ஆண்டினுள் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.

2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மொத்தத் தொகை ரூ. 471,048 ஆன பெறவேண்டிய மீதிகளும் மொத்தத் தொகை ரூ. 4,800,700 ஆன செலுத்த வேண்டிய மீதிகளும் 1 முதல் 8 வரையிலான ஆண்டுக் காலப்பகுதியில் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

***பதில் :*** பெறவேண்டிய மீதிகள்

| கணக்கின் பெயர் | தொகை ரூபா | நிறுவகத்தின் பதில் |
|---|---|---|
| பெறவேண்டிய நிறுத்தி வைத்தல் வரி | 242,104 | செலவொன்றாக பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| ஊழியர் கடன் | 217,587 | சம்பந்தப்பட்ட ஊழியரின் சேமலாப நிதிக் கொடுக் கப்படாததுடன், அதன் மூலம் அறவிடுவதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| | 11,360 | |
| பணியாட்டொகுதிக் கடன் | 471,048 | |

*செலுத்த வேண்டிய மீதிகள்*

| | கணக்கின் பெயர் | மீதிகள் | |
|---|---|---|---|
| 1. | உள்நாட்டு பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் | 2,625,758 | |
| 2. | செலுத்த வேண்டிய பாடநெறிக் கட்டணம் | 120,000 | முகாமைச் சபையின் அங்கீகாரத்துடன் வருமானத்தினுள் |
| 3. | Stipend Payable | 30,000 | எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| 4. | பாடநெறிக் கட்டணம் | 1,623,500 | |
| 5. | Amalgamated Club | 27,351 | |
| 6. | மருத்துவக் கட்டணம் | 97,101 | சம்பந்தப்பட்ட தரப்பினர்களை அறிவூட்டி குறிப்பிட்ட |
| 7. | மாணவர் சங்கம் | 53,301 | தொகைகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| 8. | பீ. கே. எச். திலகரத்ன | 12,500 | |
| 9. | ஈ. ஹெட்டிஆரச்சி | 16,337 | |
| 10. | நிறுத்தி வைக்கப்பட்ட நிதி (Retentions) | 194,612 | |
| | | 4,800,790 | |

2.2.4 *சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கி ஒழுகாமை*

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன:-

| பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கின்மைகள் |
|---|---|
| இலங்கை அரசாங்க நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 394 (அ) | 2010 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் பொறுப்பாக காட்டப்பட்டிருந்த ரூபா 75,878 பெறுமதியான இரத்துச் செய்யப்பட்ட காசோலை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>**பதில் :** வெளிநாட்டுக் கருத்திட்ட நிதியின் மூலம் வழங்கப்பட்ட ஆனால் சமர்ப்பிக்கப்படாத காசோலையின் கீழ் காட்டப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் வருமானமாக கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) நிதிப்பிரமாணம் 756 மற்றும் பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் XXVI ஆவது அத்தியாயத்தின் 2 ஆம் உப பிரிவின் 2.1 | நிறுவகத்தில் காணப்படுகின்ற எல்லா நடைமுறையல்லாத சொத்துக்களும் வருடாந்தம் கணக்கெடுப்பு எடுக்க வேண்டிய போதிலும், கிரயம் ரூபா 465,902,538 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக் கள் கணக்கெடுப்புச் செய்து கணக்கெடுப்பு சபையின் அறிக்கை 2013, ஒகத்து 23 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப் பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>**பதில் :** 2012 இன் பொருட்கள் கணக்கெடுப்பு தொழில்சார் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் வரைவு அறிக்கை எமக்கு கிடைத்துள்ளது. குறிப்பிட்ட சீராக்கல் செய்யப்பட்டு இறுதி அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் கணக்காய்வுக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) 2011, ஏப்பிறல் 04 ஆந் திகதிய 45 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4(அ) ஆம் உபபிரிவு மற்றும் உயர் கல்வி அமைச்சின் 2011, சனவரி 20 ஆந் திகதிய 2011/01 ஆம் இலக்கமும் கொண்ட கடிதம் | ஆய்வுக் கொடுப்பனவுக்கு உரித்துப் பெறுவதற்காக பல்கலைக் கழக நிலையான குழுவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு முகாமைக்கான குழுவிடமிருந்து ஆய்வு முன்மொழிவுகளுக்காக அங்கீகாரம் பெறபட வேண்டிய போதிலும், அதற்குப்பதிலாக முகாமைத்துவக் கலைகள் குழுவின் சிபாரிசு பெறப்பட்டிருந்தது. கல்விசார் பணியாட்டொகுதி உறுப்பினர்கள் 25 பேருக்கு மீளாய்வு ஆண்டில் சனவரி முதல் ஒற்றோபர் வரையிலான காலப்பகுதியில் ரூபா 2,060,529 கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>**பதில் :** நிறுவகத்தின் விரிவுரையாளர் குழாமுக்கு 2011, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதியும் 1/2011 இலக்கமும் கொண்ட உயர் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு இணங்கவே ஆய்வுக் கொடுப்பனவு |

| பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கின்மைகள் |
|---|---|
| | கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அச்சுற்றறிக்கையின் 4(அ) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆய்வுக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள தகைமை பெறுகின்ற விரிவுரையாளர்களால் ஆய்வு முன்மொழிவொன்றைச் சமர்ப்பிப்பதற்கு நிலையான குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு முகாமைத்துவ குழுவை நியமிப்பதற்காக எமது நிறுவகத்தின் கலை குழு மற்றும் முகாமை சபையின் சிபாரிசுடன் கொழும்பு பல்கலைக்கழக நிலையான குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் தவறுதலாக சிறிது தாமதமாக நிலையான குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) 2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கணினிக் கற்கைகள் நிறுவக விதிக்கோவையின் 13 ஆம் பிரிவின் 2(1)(அ) | ஆய்வுக் கொடுப்பனவை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்காக ஆய்வு முன்னேற்றம் பற்றிய குழுவொன்றினால் திருப்தியடைதல் அவசியமென்ற போதிலும், விரிவுரையாளர்கள் 07 பேருக்கு வழங்கப்பட்ட ரூபா 557,175 கொடுப்பனவுக்காக ஆய்வு முன்னேற்றம் பற்றிய குழு திருப்தியடைந்திருக்கவில்லை.<br><br>**பதில் :** குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 3(iii) உப பிரிவுக்கு ஏற்ப ஆய்வு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ள முடியும். எதிர்வரும் ஆண்டிற்கான இக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும்போது இம் மும்மொழிவுகளின் முன்னேற்றங்கள் மதிப்பீடு செய்யப்படும். |
| (ஈ) 2009, யூன் 08 ஆந் திகதிய யூஜீசீ/2/பீஜீஎஸ்/6 ஆம் இலக்கமுடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடிதம் | பல்கலைக்கழக பட்டப்பின்படிப்பு பாடநெறி கற்பித்தல்களில் ஈடுபடுகின்ற விரிவுரையாளர்களுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 2,500 வீதம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 2012, சனவரி மாதம் முதல் செத்தெம்பர் மாதம் வரை விரிவுரை மணித்தியாலத்திற்கு ரூபா 3,000 மற்றும் ரூபா 4,000 படி மொத்த மாக ரூபா 2,840,250 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.<br><br>**பதில் :** பட்டப் பின்படிப்பு பாடநெறி - வெளியக விரிவுரையாளர் களுக்கான கொடுப்பனவு<br><br>கணினி தொழில்நுட்ப விஞ்ஞானம் சம்பந்தமாக நடத்தப்படும் MSc கணினிப் பட்டம் எமது நிறுவகத்தைப் போல ஏனைய பல்கலைக்கழகங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றினாலும் நடாத்தப்படுகின்றது. இப் பாடநெறிக்கு காணப்படும் கேள்வியானது பாடநெறியின் சிறப்பியல்பின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. பாடநெறியின் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக உள்ளக மற்றும் வெளியக விரிவுரையாளர்களும் ஆட்சேர்த்துக் கொள்ளல் நடைபெறும்.<br><br>பாடநெறிகளுக்கான விரிவுரையாளர்கள் வருகை தரல் தீர்மானிக் கப்படுவது அவர்களுக்கு கொடுக்கப்படும் மணித்தியாலத்திற்கான விரிவுரைக் கட்டணத்தின் அடிப்படையிலாகும். வார இறுதி நாட்களில் இப் பாடநெறியினை நிறுவனங்கள் அனைத்தினாலும் நடத்தப்படுவதுடன், கூடிய விரிவுரைக் கட்டணத்தை செலுத்தும் நிறுவனத்திற்கே விரிவுரையளர்கள் வருகை தருவதற்கு அதிகளவு விருப்பம் தெரிவிப்பார்கள்.<br><br>எம்மால் கொடுக்கப்படும் விரிவுரைக் கட்டணத்தில் விரிவுரைகளுக்குத் தேவையான அச்சுக் குறிப்புக்கள் தயாரித்தல், அச்சிடல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய சகல ஆரம்பச் |

| பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கின்மைகள் |
|---|---|
| | செலவுகள் உள்ளடக்கப்பட்டு இம்மணித்தியால விகிதம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், ஏனைய நிறுவனங்கள் அச் செயற்பாடுகளுக்காக தனித்தனியாக கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றது. அதாவது, LMS யினைப் பயன்படுத்தி அச்சிட்ட விரிவுரைக் குறிப்புக்களை தயாரிக்கிறது.<br><br>இந்த பாடநெறியொன்றினால் ஈட்டப்படும் நிதியில் 60% மான அளவு பாடநெறியினது செயற்பாடுகளுக்காக செலவிடப் படுவதுடன், மிகுதி 40% மான அளவு, அதாவது ரூபா 10 மில்லியன் அளவு நிறுவகத்தின் உள்ளக மாணவர்களது விடயங்கள், நிறுவகத்தின் அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் அதேபோல், ஆய்வு விடயங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. அதனூடாக அரசாங்கத்திற்கும் உள்ளக பட்டதாரி மாணவர்களுக்காக செலவிட வேண்டிய செலவினை குறைத்துக் கொள்வதற்கு நல்லதொரு வாய்ப்பாக உள்ளது.<br><br>ஏதாவது காரணத்திற்காக இவ்வாறு விரிவுரைக் கட்டணமாக மணித்தியாலத்திற்கு கொடுக்கப்படுகின்ற கட்டணத்தைக் குறைக்க வேண்டியேற்பட்டால், பாடநெறியினை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதில் தடங்கல் ஏற்படும் என்பதுடன், அது நிறுவனத்திற்கும் அதேபோல் அரசாங்கத்திற்கும் பெரும் நட்டமாகுமென்பது உறுதியாகும்.<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது தீர்மானிக்கப்பட்டவாறு இந்த மணித்தியால விகிதத்தை அதிகரிப்பதற்கான அங்கீகாரத்தைக் கோரி அனுப்பப்பட்டுள்ளது. |

### 3. நிதிசார் மீளாய்வு

#### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின்படி 2012, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 56,50,218 மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 9,569,010 ஆகும். மீண்டெழும் செலவினங்களிற்கான ரூபா 91,802,000 ஆன அரசாங்க மானியம் காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 97,452,218 வரை வளர்ச்சியடைந்துள்ளது. முன்னைய ஆண்டின் போது ரூபா 83,102,728 ஆன மீண்டெழும் செலவினங்களுக்கான அரசாங்க மானியம் காரணமாக பற்றாக்குறை ரூபா 73,533,724 மிகையொன்றாக ஆகியிருந்தது. மீளாய்வாண்டிற்காக அரசாங்கத்தின் ரூபா 23,918,500 வளர்ச்சி ஏற்பாடுவதற்கு மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியம் ரூபா 8,699,272 ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் வருமானம் ரூபா 31,579,250 ஆல் வளர்ச்சியடைந்தமை காரணமாக அமைந்தது.

பதில் : குறித்துக் கொள்ளப்பட்டது.

### 4. செயற்பாட்டு மீளாய்வு

#### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன :-

(அ) தகுதிகாண் விரிவுரையாளரொருவர் 2005, திசெம்பர் 31 ஆந் திகதி சேவையிலிருந்து நீங்கிச் சென்றுள்ளதுடன், உத்தரவாதத்தின் பெறுமதியான ரூபா 798,589 நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டியிருந்தது. 2006, நவெம்பர் 16 ஆந் திகதி முதல் 03 சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபரினால் தகவல்களை கோரியிருந்த போதிலும் வழங்கப்படாத காரணத்தினால் சட்ட நடவடிக்கைகள் பாதிப்படைந்திருந்தது. இந்நிதியை சேமலாப நிதியின் மூலம் அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பதில் : மேற்படி அவதானிப்பு சம்பந்தமாக இணங்க இயலாது தகுதிகாண் விரிவுரையாளரான திரு ருக்மன் சேனாநாயக்க நிறுவகத்திற்கு செலுத்த வேண்டிய உத்தரவாதத்தின் பெறுமதி ரூ. 798,588.54 தொகையென்பதுடன், அதனை அறவிடுவதற்காக அவர் சேவையிலிருந்து நீங்கிச் சென்றாரா, இல்லையென்றால் அவரால் ஈ அஞ்சல் செய்தி மூலம் அனுப்பப்பட்டுள்ள இராஜினாமாவை ஏற்றுக் கொள்வதா என்பதை நிருவாக சபை மூலம் தீர்மானிப்பதற்காக

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நினைவூட்டலும் செய்யப்பட்டுள்ளது. இது வரையும் அது பற்றிய தீர்மானம் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தினாலும் கொழும்பு பல்கலைக்கழகத்திடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) விரிவுரையாளர் ஒருவர் 2004, ஒற்றோபர் 01 ஆந் திகதி சேவையிலிருந்து நீங்கிச் சென்றுள்ளதுடன் அறவிட வேண்டிய உத்தரவாதத்தின் பெறுமதி ரூபா 1,311,691 ஆகும். இந்த உத்தரவாதத்தின் பெறுமதியை செலுத்துமாறு விரிவுரையாளருக்கு 2006, ஒற்றோபர் 10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்துள்ள போதிலும் கணக்காய்வு தினம் வரையும் குறிப்பிட்ட கொடுப்பனவு செலுத்தப்பட்டிருக்காததுடன், விரிவுரையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவகம் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பதில் : ஆர். கே. ராஜபக்ஷ என்ற விரிவுரையாளர் உரிய உத்தரவாதத்தின் பெறுமதியை நிறுவகத்திற்கு செலுத்தாமை தொடர்பில் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட விடயம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்படுகிறது.

(இ) விரிவுரையாளர் ஒருவர் 2004, நவெம்பர் 01 ஆந் திகதி சேவையிலிருந்து நீங்கிச் சென்றிருந்ததுடன் அறவிட வேண்டிய உத்தரவாதத்தின் பெறுமதி ரூபா 3,440,576 ஆகும். விரிவுரையாளரின் தற்போதைய முகவரியினை கண்டுபிடிக்க முடியாமை காரணமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக 2005, ஓகத்து 31 ஆந் திகதி சட்டமா அதிபரிடம் அனுப்பப்பட்டுள்ள போதிலும் 8 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் நிறுவகத்தினால் சட்டமா அதிபரிடம் விசாரண செய்யப்பட்டிருக்கவில்லை.

பதில் : திரு. எஸ். பீ. பஹீரத்ன இறுதியாக வழங்கப்பட்டிருந்த முகவரியை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவித்துள்ள போதிலும், அவர் தற்போது அவ்வதிவிடத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இற்றை வரை வதிவிட முகவரியை கண்டுபிடிப்பதற்கு இயலாதுள்ளதுடன், முகவரியைக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும் இவ் விடயம் தொடர்பாக தற்போது வரை சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தேவையான செயற்பாடுகள் செய்யப்பட்டு வருவதுடன், திரு. பஹீதரன் சார்பில் உத்தரவாதத்திற்கு கையொப்பமிட்ட உத்தரவாதிக்கு வழக்குப் பதிவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(ஈ) விரிவுரையாளர் ஒருவர் 2004, சனவரி 01 ஆந் திகதி சேவையிலிருந்து நீங்கிச் சென்றிருந்ததுடன் அறவிட வேண்டிய உத்தரவாதத்தின் பெறுமதி ரூபா 3,373,722 ஆகும். உத்தரவாத ஒப்பந்தத்தை முறித்து இரண்டரை வருடங்களுக்கு பின்னர் அதாவது 2006, மே 22 ஆந் திகதி நிறுவகத்திற்கு அறவிட வேண்டிய உத்தரவாதத் தொகையை செலுத்துமாறு விரிவுரையாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், உத்தரவாதத் தொகையை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கினை சமரசத்திற்கு கொண்டு வந்து விரிவுரையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை 2013, செத்தெம்பர் 22 ஆந் திகதி ரூபா 2,000,000 மற்றும் 2014, மாச்சு 22 ஆந் திகதி ரூபா 1,370,772 செலுத்துவத்றகு இணங்கியுள்ளதாக நிறுவகத்தின் பணிப்பாளரினால் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பதில் : மேற்படி அவதானிப்பு சம்பந்தமாக இணங்கி விட இயலாது. இந்த விரிவுரையாளர் தொடர்பாக சட்டமாக அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR 0984/09 இலக்கம் கொண்ட வழக்கு அவருக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த வழக்கு 2013.03.01 ஆந் திகதி சமரசத்துக்கு வந்துள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள சமரச நிபந்தனைக்கு இணங்க திரு. பீ. குணரத்னவிடமிருந்து அறவிடுவதற்கு வேண்டிய ரூ. 3,370,772.36. ஆன தொகை 2013.09.22 ஆந் திகதி ரூ. 2,000,000 வும் 2014.03.22 ஆந் திகதி ரூ. 1,370,772.36 வும் என்பதாக செலுத்தி முடிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் அவதானிப்பில் உத்தரவாதத்தின் பெறுமதியாக குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 3,373,722 ஆன தொகை சரியான தொகையல்ல என்பதுடன், அது ரூ 3,370,772.36. என்பதாக அமைதல் வேண்டும்.

அத்துடன், மேற்படி விரிவுரையாளர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட சேமலாப நிதியினை விடுவிப்புச் செய்தல் ஆவணங்கள் யாவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**4.2 *நிதியங்களின் குறைவான பயன்பாடு*** :

நிலையான சொத்துக்களை கைகொள்வதற்காக அரசாங்கத்தினால் யாப்பான் ஒத்துழைப்பு நிதியத்திலிருந்து உயர் டிஜிடல் ஊடக தொழில்நுட்ப நிலையம் (Advance Digital Media Technology Center) மற்றும் சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி கருத்திட்டம் (International Development Research Center ) ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டிருந்த ரூ. 4,197,538 நிதி மூன்று வருடங்களுக்கும் கூடுதலான காலப்பகுதியிலிருந்து பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் செயற்பாடின்றி வைக்கப்பட்டிருந்தது.

**5.கணக்கு வைத்தல் பொறுப்பு மற்றும் நல்லாட்சி**

**5.1 *கூட்டுத் திட்டம்***

அரச பொது முயற்சிகள் நல்லாட்சி பற்றிய வழிகாட்டிக் கோவையின் 5 ஆம் பிரிவின் 5.1.2 ஆம் உப பிரிவின் பிரகாரம் 2011, 2015 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டுள்ள கூட்டுத்திட்டத்தில் நிறுவகத்தின் சொத்துக்களின் தற்போதைய நிலைமை பற்றிய

கூற்று, நிறுவகத்தின் வசமுள்ள வளங்கள், இலக்கு மற்றும் அவை தொடர்பாக காணப்படும் குறைபாடுகள் மற்றும் இடையூறுகள் என்பவற்றைப் பகுப்பாய்வின் படி அடையாளம் காணுவதற்காக தயாரிக்கப்பட்ட (SWOT Analysis) கூற்று மற்றும் அண்மைய மூன்று ஆண்டுகளுக்கான செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மீளாய்வு காட்டப்பட்டிருக்கவில்லை.

**பதில் :** நிறுவகத்தின் மூலம் தற்போது தயாரிக்கப்படும் கூட்டுத் திட்டத்தில் உரிய சட்டதிட்டங்களுக்கு இணங்க தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### 5.2 செயற்பாட்டுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன :-

(அ) நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுத் திட்டத்தில் அந்தந்த செயற்பாடுகளுக்கான காலப்பகுதி, எதிர்பார்க்கப்படும் நோக்கம் மற்றும் பொறுப்பு கூறும் நபர்கள் வேறாக இனங்காணக் கூடிய வகையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

பதில் : நிறுவகத்தினால் 2014 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்படுகின்ற செயற்பாட்டுத் திட்டம் அந்தந்த செயற்பாடுகளுக்கான காலப்பகுதி, எதிர்பார்க்கப்படும் நோக்கம் மற்றும் பொறுப்புக் கூறும் நபர்கள் வேறாக இனங்காணக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 5,500.00 கொள்வனவு நடவடிக்கைகள் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ் அறிக்கை 2013, பெப்புருவரி 14 ஆந் திகதி உயர் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நிறுவகத்தின் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதில் : நிறுவகத்தினால் 2012 ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ள விபரமான கொள்வனவுத் திட்டத்தில் கொள்வனவு முன் நடவடிக்கை ஆரம்ப திகதி, முடிவடையும் திகதி மற்றும் கொள்வனவு கேள்வி ஒப்படைக்கும் திகதி, முடிவடையும் திகதி போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. அக் கொள்வனவுச் செயற்பாடுகளில் காலப்பகுதி உள்ளடக்கப்பட்டு விபரமாக கொள்வனவுத் திட்டம் நிறுவகத்தின் செயற்பாட்டுத் திட்டத்திற்கு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு சமாந்திரமாக 2014 ஆண்டிலிருந்து தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### 5.3 வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பித்தல்

நிறுவகத்தின் 2011, வருடாந்த அறிக்கை 2013, யூலை 23 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் அறிக்கை 2013, பெப்புருவரி 14 ஆந் திகதி உயர் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நிறுவகத்தின் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**பதில் :** 2013.02.14 ஆந் திகதி 2011 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக உயர் கல்வி அமைச்சிடம் வழங்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடு முடிவடைந்ததன் பின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 5.4 கணினிக் கற்கைகள் நிறுவகத்தினுள் கீழ் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை தாபித்தல்

கணினிக் கற்கைகள் நிறுவகம் தாபிக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவக விதிக்கோவையின் 18(iv) ஆம் பிரிவுக்கு இணங்க கணினி நிலையம் தாபிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 ஆம் பிரிவுக்கு முரண்படாத வகையில் கணினிக் கற்கைகள் நிறுவக விதிக்கோவையில் காட்டப்பட்டுள்ள ஒத்த நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கணினிச் சேவைகள் நிலையத்திற்கு நேரடிப் போட்டித் தன்மைக் வடிவிலான, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சினதும் அமைச்சரவையினதும் அங்கீகாரத்துடன் செய்யப்பட்டிருக்க வேண்டியிருந்தும் முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் படி கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட தீக்ஷன பிறைவேட் கம்பனி தாபிக்கப்பட்டமை சட்டத்திற்கு இணங்கியதாக அமையவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**பதில் :** சர்வதேச தரத்திலான பல்கலைக்கழகங்களால் தமது ஆய்வுப் பெறுபேறுகளை வணிகமயப்படுத்தும் போது (Commercialization) கடைப்பிடிக்கப்படுகின்ற கொள்கைகளைப் பயன்படுத்தி கொழும்புப் பல்கலைக்கழக கணினி கற்கைகள் நிறுவகத்தின் ஸ்தாபகர் வித்தியஜோதி பேராசிரியர் வீ. கே. சமரநாயக்க அவர்களின் ஆலோசனையின்படி இந்த வரையறுக்கப்பட்ட தீக்ஷண கம்பனியை தாபிப்பதற்கு முகாமைத்துவ சபையின் மூலம் அனுமதியளிக்கப்பட்டது.
அதற்கிணங்க 2006, சனவரி 5 ஆந் திகதி நடைபெற்ற 40 ஆவது கொழும்புப் பல்கலைக்கழக கணினி கற்கை நிறுவுகத்தின் முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு (Memo No.: UCSC/BOM/40/12 (i)) இணங்க முடிவு செய்யப்பட்டவை, கணினி சேவைகள் நிலையம் (CSC) கம்பனியொன்றாக தாபிப்பதற்கு ஆராய்தல், அவ்விடயங்களுக்காக ஆலோசனையாளரொருவர் (Consultant) மற்றும் சட்டத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கம்பனி செயலாளரொருவர் நியமித்தல் வேண்டுமென்பதாகும்.

அதன் பின்னர், 2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 2 ஆந் திகதி நடைபெற்ற 42 ஆவது முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு [Memo No.: UCSC/BOM/40/10 (d)] ஏற்ப, சனவரி 5 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதன் படி நியமிக்கப்பட்ட ஆலோசனையாளரால் குறிப்பிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என்பதாகும். அத்துடன், அவ்வறிக்கையை பரிசீலனை செய்ததன் பின்பு முகாமைத்துவ சபைக்கு கம்பனியை தாபிப்பதற்குத் தேவையான ஆரம்பச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

முகாமைத்துவ சபையானது இவ்விடயத்தில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் தாபிக்கப்பட்டுள்ள கம்பனியை முன்னுதாரணமாகக் கொண்டதுடன், அதன் சட்ட ஆலோசகரினதும் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது. அத்துடன், சர்வதேச தரத்தினாலான பல்கலைக்கழகங்களால் தமது ஆய்வுகளின் பெறுபேறுகளை வணிகமயப்படுத்தலின் போது கடைப்பிடிக்கப்படும் உபாயமார்க்கமாக இவ்வாறான கம்பனியொன்றை தாபித்தல் காலத்திற்கான தேவையொன்றாக அடையாளம் காணப்பட்டது.

இந்த தீக்ஷன கம்பனி, கணினி சேவைகள் நிலையத்துடன் எவ்வகையிலும் போட்டி நிலையினை உண்டாகாது. ஏனெனில், இந்தக் கம்பனியின் ஆலோசனை சேவைகளானது சர்வதேச நிதியங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கு மாத்திரமே பெற்றுக் கொடுக்கப்படும் என்பதாகும். அத்துடன், உலக வங்கி நிதியின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ICTA முகவர் நிறுவனத்தின் சிபாரிசின் படி (Recommendation) கம்பனிக்கு கிடைக்கின்ற ஒப்பந்தத்திற்கு ஏற்ப ஆலோசனை சேவைகள் வழங்கும்.

கணக்காய்வு சிபாரிசுகளுக்கு ஏற்ப அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் நிறுவகத்தின் பணிப்பாளருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்

பதில் : குறித்துக்கொள்ளப்பட்டது.

(ஆ) கணக்கு வைத்தல்
பதில் : குறித்துக்கொள்ளப்பட்டது.

(இ) கருத்திட்ட நிதிகள்
பதில் : குறித்துக்கொள்ளப்பட்டது.

(ஈ) கொள்வனவுகள்
பதில் : குறித்துக்கொள்ளப்பட்டது.

நன்றி

பேராசிரியர் ஜீ. என். விக்கிரமநாயக்க,
பணிப்பாளர்.

3-556

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## மக்கள் வங்கி

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2014, யூன் 26 ஆந் திகதி நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"களுஹெட்டி ஆராச்சிகே பிரதீப் தம்மிக்க பெரேரா மற்றும் உடுநுவரகே வஜிரா பிரியங்கனி பெரேரா என்போர், மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி ஏ. ஏ. எஸ். டபிள்யூ. அமரசிங்க என்பவரால் எல்லாம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.08.25 ஆந் திகதிய 8219 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும், 2005.09.02 ஆந் திகதிய 7338 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும், 2006.08.28 ஆந் திகதி 7655 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி

பிரியாந்தி லியனகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012.05.29 ஆந் திகதிய 5586 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலால், 2012.11.16 ஆந் திகதி முதல் சொல்லப்பட்ட 8219, 7338, 7655 மற்றும் 5586 ஆம் இலக்க முறிகள் மீது ஐம்பத்துமூன்று இலட்சத்து பதினையாயிரத்து நாற்பத்தெட்டு ரூபா தொண்ணூற்று மூன்று சதம் (ரூ. 53,15,048.93) கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் வரவேண்டியுமுள்ளதாதலாலும், மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் மக்கள் வங்கிச் சட்டத்தினால் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் நாற்பத்து இரண்டு இலட்சத்து முப்பத்துநான்காயிரதர்து முப்பத்துமூன்று ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூ. 42,34,033.55) கொண்ட தொகையையும் இருபத்துமூன்று இலட்சத்து எண்பத்தேழாயிரத்து முப்பத்தாறு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூ. 23,87,036.54) கொண்ட தொகை மீது 2012.11.17 ஆந் திகதி முதல் ஆண்டொன்றுக்கு 24% வட்டியையும் எட்டு இலட்சத்து எழுபதாயிரத்து நாநூற்று முப்பத்தேழு ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 8,70,437.49) கொண்ட தொகை மீது 2012.11.17 முதல் 16.5% வட்டியையும் ஒன்பது இலட்சத்து எழுபத்தாறாயிரத்து ஐநூற்று ஐம்பத்தொன்பது ரூபா ஐம்பத்திரண்டு சதம் (ரூ. 9,76,559.52) கொண்ட தொகை மீது 2013.12.19 முதல் ஆண்டொன்றுக்கு 24% வட்டியையும், செலவுத் தொகைகளையும் வேறு விற்பனை இறுப்பனவுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையேனும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஏர்வின் பெரேரா அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.".

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோறளையின் அதிகாரி பத்துவில் கொட்டிக்காவத்த, முல்லேரியாவ பிரதேச சபை எல்லைகளினுள் முல்லேரியாவில் அமைந்துள்ளதும், குமார மாவத்தையில் 30A ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும், அதன் மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் ''தவட்டகஹாவத்த மறுபெயர் கொஸ்கஹாவத்த'' எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் சாலிய விக்ரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1994.04.12 ஆந் திகதிய 2901 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் "B" என அடையாளம் இடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித் துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட ''காணித்தண்டம் B'' இன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : காணித்துண்டங்கள் A மற்றும் C ; கிழக்கு : அனோமா குணசேக்கரவின் காணி ; தெற்கு : லீலாவதி அபேவர்தனவின் காணி மற்றும் ; மேற்கு : ஜே. எம். சுது பண்டாவின் காணி. பரப்பளவில் இது. ஒன்பது பேர்ச் (0ஏ. 0றூ. 9பே.) (0.0228 ஹெக்.) கொண்டுள்ளதுடன், கொழும்பு காணிப் பதிவகத்தில் L 71/39 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். எச். பீரிஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1987, மே 4 ஆந் திகதிய 5227 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டம் G²C என அடையாளம் இடப்பட்டதும், உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சாலிய விக்ரமசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1994, ஏப்பிறல் 12 ஆந் திகதிய 2901 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் ''C'' என அடையாளமிடப்பட்டதுமான காணியின் மீதம் அது நெடுகிலுமான செல்வழியுரிமையுடனும் ஏனைய பொது உரிமைகளுடனும் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கொழும்பு தெற்கு.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

3-534

---

**இலங்கை வங்கி**

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவினதும் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2014.09.16 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. ''பிரசித்த நொத்தாரிசு எட்மன்ட் குலரத்ன அத்தாட்சிப்படுத்திய 2006.01.25 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 9943 மற்றும் பிரசித்த நொத்தாரி பேர்சி வடுகெதர அத்தாட்சிப்படுத்திய 2011.09.26 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 9569 ஆகியவற்றின் பேரில் ஏ. பீ. எஸ். பாம், தல்கஹபிட்டிய, பிங்கிரிய என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. ஹெட்டிஆரச்சிகே அமில பிரதீப் சாகர பெரேரா அல்லது திரு. ஹெட்டிஆரச்சிலாகே அமில பிரதீப் சாகர பெரேரா அல்லது திரு. ஹெட்டி ஆரச்சில்லாகே அமில பிரதீப் கரசா பெரேரா ஆகியோரிடமிருந்து 2014.08.11 வரை முதலும் வட்டியும் அறுபத்திரண்டு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து எழுநூற்று நாற்பத்திரண்டு ரூபா பதின்நான்கு சதம் (ரூ. 62,74,742.14) அத்துடன் ஐம்பது இலட்சத்து ஐம்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று பத்து ரூபா நாற்பத்தாறு சதம் (ரூ. 50,59,810.46) ஆண்டுக்கு பத்து தசம் இரண்டு ஏழு (10.27% ) வீதத்தில் 2014.08.12 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட 2006.01.25 ஆந் திகதியிட்ட முறி இல. 9943 மற்றும் 2011.09.26 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 9569 ஆகியவற்றின் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட அறுபத்திரண்டு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து எழுநூற்று நாற்பத்திரண்டு ரூபா பதின்நான்கு சதம் (ரூ. 62,74,742.14) அத்துடன் 2014.08.12 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடு வைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 33, தல்கொடபிட்டிய மாவத்தை, மல்கடுவாவ, குருநாகல் என்னும் முகவரியைச் சேர்ந்த

ஏலதாரர் திரு. எச். டபிள்யூ. அசோக ஜயலால், என்பவருக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமையவும் மேற்குறிப்பிடப்பட்ட இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத் தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பிங்கிரிய கிளை, முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது.".

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல ஹத்பற்று கினியகம கோறளையில் பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவில் தல்கஹபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் பிங்கிரியவில் அமைந்த 'பரண வத்த' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம்.எம்.பீ. டி. பெரேரா தயாரித்த 1989.07.10 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 263 இல் விபரித்த துண்டு 03, 04 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு: மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 263 இல் துண்டு 02 உம் ; கிழக்கு : துண்டு 05 ரோட்டும், எரிக்சூரியசேன உரிமை கோரும் காணியும் ; தெற்கு : எரிக் சூரியசேன உரிமை கோரும் காணியும் ; மேற்கு : அன்றனி பெர்ணான்டோ உரிமை கோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் இரண்டு றூட் மூன்று தசம் இரண்டு பேர்ச்சஸ் (1ஏ. 2றூ. 3.2பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது குளியாபிட்டிய காணிப்பதிவகத்தில் M 125/236 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை ஒழுங்கில் உள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) எஸ். என். ஆர். ரத்னகாந்தி,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பிங்கிரிய,
2015, பெப்புருவரி 02.

3- 594

---

### கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி

1990ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 1260395 - பெத்கமகே குருவிட்டகே தில்சான் புத்திக பெரேரா

29.08.2014 ஆந் திகதி கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"கடன் எடுத்த பெத்கமகே குருவிட்டகே தில்சான் புத்திக குமார பெரேரா கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். எம். சி. பி. ஏரத் 2012.06.28 ஆந் திகதி ஈட்டு முறி இலக்கம் 1880 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் மேற்படி முறி பிரகாரம் 2014.07.17 ஆந் திகதி வரை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சிக்கு ரூபா 1,47,26,258.63 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும், அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் படி மேற்படி ஈட்டுமுறி இலக்கம் 1880 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்படும் காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 14,726,258.63 உடனும் 2014.07.18 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 1,37,14,325.83 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு 16% வட்டியுடனும் விளம்பரச் செலவுகளும், வேறு கொடுப்பனவுகளும் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12 புதுக்கடை வீதி, இலக்கம் 182, 3 ஆவது மாடியில் அமைந்துள்ள ஏலதாரர்கள் திரிவிண்கா அன்ட் சேனநாயக்க உத்தரவு பெற்ற ஏலதாரர் எல்.பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.".

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனை பாணந்துறை தல்பிட்டதெபத்த பாணந்துறை நகர சபை எல்லையில் பாணந்துறை மாவட்ட செயலாளர் இலக்கம் 683A வல்பொலபட்டிய கிராம சேவையாளர் எல்லையில் வல்பொல பட்டிய கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் ஏ. எம். ஆர். ஜயசேகரவின் 2011.12.16 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 7687 இல் காண்பிக்கப்பட்ட லொட் A எல்லைகள் - வடக்கு : கெட்டகெலகாவத்த திருமதி எல். சி. டி. மெல்க்கு சொந்தமானது ; கிழக்கு : வரைபடம் இலக்கம் 2664 இல் லொட் B ; தெற்கு : டயஸ் பிளேஸ் ; மேற்கு : பிரத்தியேக ரோட் காட்டவத்த ஆனந்த வீரசூரியவுக்கு சொந்தமானது இக்காணியின் விஸ்தீரணம் இருபத்து எட்டு தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 28.75பே.) மேற்படி இலக்கம் 7687 படி.

மேற்கூறிய காணி இக் கீழ் விபரிக்கப்பட்ட காணி மீண்டும் அளந்த காணியாகும்.

மேற்படி வல்பொலபட்டியவில் அமைந்தள்ள வீடு இலக்கம் 17 அமைந்துள்ள கோண்வத்த காணிக்கு நிலஅளவையாளர் எல். டபிள்யூ. எல். டி. சில்வா 1982.02.10 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 2664 இல் காண்பிக்கப்பட்ட லொட் A எல்லைகள் - வடக்கு: காட்டகாவத்த ஆனந்தசூரியவுக்கு சொந்தமானது கெட்டகெலகாவத்த திருமதி எல். சி. டி. மெல்க்கு சொந்தமானது மற்றும் வரைபட இலக்கம் 2664 லொட் B ; கிழக்கு : வரைபடம் இலக்கம் 2664 இல் லொட் B ; தெற்கு : டயஸ் பிளேஸ் B ; மேற்கு : பிரத்தியேக ரோட் காட்டவத்த ஆனந்த வீரசூரியவுக்கு சொந்தமானது மற்றும் பிரத்தியேக ரோட். இக்காணியின் விஸ்தீரணம் இருபத்து எட்டு தசம் ஏழு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 28.75பே.) இக் காணி பாணந்துறை காணிப் பதிவகத்தில் F602/13 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(திருமதி) ரன்ஜனி கமகே,
கம்பனி செயலாளர்.

3- 589

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.